**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,எண்.2 நாகர்கோவில்**

முன்னிலை: திரு.க.தாயுமானவர், M.B.A., M.L.,
நீதித்துறை நடுவர் எண்,2
நாகர்கோவில்.

திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 22–ம் நாள்
2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08–ம் நாள் வெள்ளிக்கிழமை

**சுருக்கு முறை விசாரணை வழக்கு எண்.3306/2022**
**கோட்டார் காவல்நிலைய குற்ற எண்.147/2022**

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>கோட்டார் காவல் நிலையம், நாகர்கோவில் | : | குற்றமுறையிடுபவர் |
| –எதிர்– | | |
| ராமசாமி, வயது 65/2022,<br>த/பெ.பழனி செட்டியார்,<br>ராஜீவ்காந்தி நகர்,<br>கோட்டார். | : | எதிரி |

இவ்வழக்கானது 28.12.2022–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றவியல் நடுவர் எண்.2–ல் 11 மாதகாலமாக நிலுவையில் உள்ளது. எதிரி ஆஜராகாமலும், சாட்சிகள் விசாரிக்கப்படாமலும், இந்நாள் வரை நீதிமன்ற பரிசீலனையில் இருந்து விசாரணை முடிந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. எதிரி மீது சட்டபிரிவு 4(1)(a) TNP Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று கோட்டார் காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.
2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வழக்கு 11 மாதங்களுக்கு மேல் அழைப்பாணைகளாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் அரசு தரப்பில் எதிரியை ஆஜர்படுத்தி வழக்கு நடத்தாமல் 11 மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. காவல்துறைக்கு இறுதி அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேலும் இவ்வழக்கை முடிப்பதால் பாதிக்கப்பட்டவருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படாது. மேலும் எந்த நபருக்கும் பாதிப்பு ஏற்படாது. நாட்டிற்கும் பாதிப்பு ஏற்படாது. மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் முன்னோடி வழக்கில் 1996 Supreme Court (Criminal) 589 (before B.P.Jeevan Reddy and S.NB. Majmudal JJ) " Common case A Registered Society through its Director Peititoner Vs Union of India and others Respondents" (When the cases pending in criminal courts under IPC or anyother law for the time being inforce are punishable with imprisonment up to three years with or without time, and it such pendency is more than

two years and if to such cases trials have still not commenced the criminal court shall discharge or acquit the Accued, as the case may be and close such cases.

3. இவ்வழக்கில் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி மேற்படி முகவரியில் இல்லை மற்றும் அவரை கண்டுபிடிக்க முடியாது என்று கூறியதை பரிசீலித்து பார்க்கையில், இந்த வழக்கு ஒரு சுருக்கு முறை விசாரணை வழக்கு என்பதால், எதிரி இல்லாமல் இவ்வழக்கினை நீண்ட நாட்களாக நடத்த முடியாது. மேலும், இவ்வழக்கில் எந்தவொரு முன்னேற்றம் இல்லாமல் 11 மாதங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் இந்த வழக்கை நிலுவையில் வைப்பதால் எந்த முன்னேற்றமும் ஏற்பட போவதில்லை. எனவே இவ்வழக்கை பிரிவு 258 கு.வி.மு.ச.–ன்படி முடித்து எதிரி மீதான சட்டபிரிவு 4(1)(a)TNP Act–ன் கீழான குற்றச்சாட்டிலிருந்து எதிரியை விடுவித்து வழக்கை முடித்து உத்தரவிடப்படுகிறது.

4. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள ஆர்.பி.எண்.709/2022–ல் உள்ள சுமார் 180 எல்.எல் பிடிக்கக்கூடிய One Man Army Rum பாட்டில்கள் 7 மற்றும் சுமார் 180 எம்.எல் பிடிக்க கூடிய Honey Day Brandy பாட்டில்கள் 4 ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08–ம் நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்)க.தாயுமானவர்,
நீதித்துறை நடுவர் எண்.2
நாகர்கோவில்.

<u>பின்னிணைப்பு</u>.
அரசு தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்– இல்லை

/உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் எண்.2
நாகர்கோவில்.